**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS 135/2016**

16.07.2025

**பி.வா.சா. 3 சித்தார்த்தன் த/பெ. முத்தையன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் மன்னார்குடி மேலவிழல்காரத் தெருவில் வசிக்கிறேன். அந்த வீடு எனக்கு பூர்வீகமான வீடாகும். எத்தனை ஆண்டுகளாக அந்த வீட்டில் வசிக்கவில்லை என்றால் 1 ஆண்டு மட்டும் House Board வீட்டில் வசித்தேன். தற்சமயம் அந்த வீட்டில் தான் வசிக்கிறேன். 2024 ஆம் ஆண்டு Housing Board வீட்டில் இருந்தோம். எனக்கும் என் சகோரருக்குமிடையே பிரச்சனை ஏற்பட்ட பிறகு பூர்வீக விட்டிலே நான் இல்லை என்றாலும் வெளியில் தான் வசிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நாராயணசாமி கண்டியர் மகன் மாளங்கோ எனக்கு தெரியும் அவர் என் பக்கத்துவீட்டுக்காரர். அவர் வீட்டிற்கு எதிர்புறம் விவேகானந்தன் என்ற ஒரு Engineer இருந்தாரா என்றால் வெகுகாலத்திற்கு முன்பு இருந்தார். மாளங்கோ Engineer மகளை திருமணம் செய்வதில் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். நான் மாளங்கோவிற்கு வேண்டப்பட்டவர் என்றால் சரியல்ல. நாராணயசாமி கண்டியர் வீட்டில் ஒற்றுமையில்லாததால் அவர் குடும்பத்தை விட்டு பிரிந்து மும்முர்த்தி விநாயகர் தெருவிற்கு வந்துவிட்டார் என்றால் சரிதான். நான் அமுதுபடையல் கமிட்டியில் தலைவராக 4 ஆண்டுகள் இருந்தேன். தற்போது தலைவர் இல்லை. மாளங்கோ ஒரு ஓட்டுவீட்டை வாங்கினாரா என்றால் தெரியாது. அவர் தகப்பனார் நாராயணசாமி வாங்கினார். மாளங்கோ புதிதாக கட்டியவீட்டிற்கு எப்போது குடிவந்தார் என்றால் 1990 ல் வந்தார். அந்த வீடு எப்போது கட்டஆரம்பிக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. வசந்தா எப்போது வீடு வாங்கினார் என்றால் 1996 ல் கிரயம் பெற்றார். மணிமேகலை எப்போது கிரயம் வாங்கினார் என்றால் 1999 ல் கிரயம் வாங்கினார். நான் எந்தஒரு பேச்சுவார்தையும் நடத்தி கிரயம் வாங்கிகொடுக்கவில்லை. என் தம்பி ரியல்எஸ்டேட் தொழில் செய்து வந்ததில் ஈடுபாடு காட்டி வீடு வாங்கிகொடுத்தாரா என்றால் இல்லை. 1996 ல் வசந்த கிரயம் பெறும்போது காம்பௌண்ட் இருந்தது. கிழக்கு மேற்காக 20 - 30 அடி நீளத்திற்கு செங்கல் காம்பௌண்ட் சுவர் கட்டப்பட்டுள்ளது அதை எப்போது கட்டினார்கள் என்று தெரியாது. Readymade காம்பௌண்ட் சுவர் எப்போது வைத்தார்கள் என்று தெரியாது பாதி பழைய சுவரும் பாதி Readymade சுவரும் உள்ளது. 1 ஆண்டுக்கு முன்பு அந்த இடத்தை பார்த்துள்ளேன். ரெடிமெட் சுவர் எவ்வளவு நீளம் இருக்கும் காங்ரெட் சுவர் எவ்வளவு நீளம் இருக்கும் என்று தெரியாது. வாய்காலிருந்து வீடுவரை மேற்சொன்ன இரண்டு சுவர்களும் கலந்து கட்டப்பட்டுள்ளது. மாளங்குவிடமிருந்து வசந்த கிரயம் பெற்றவுடன் கம்பிவேலிதான் வைத்திருந்தார் என்றும் நான் சொல்வதுபோல் எந்த சுவரும் அங்கு இல்லை என்றாலும் சரியல்ல. மேற்கே இருக்கும் வாய்கால் வரை இன்றுவரை கம்பி

வேலிதான் உள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து ஆணையர் , சர்வேயர் வந்து அளக்கும்போது நான் அங்கு இல்லை. நாராயணசாமி கண்டியர் எங்கள் குடும்பத்திற்கு வேண்டியர் என்பதால் சில உண்மைகளை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சார்பு நீதிபதி,

மன்னார்குடி